**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C 167 of 2013**

**Deposition of Witness P. W.4**

| | |
|---|---|
| **Name : குமார்** | **Father/Husband's Name: ராஜமாணிக்கம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 04.03.2024**
**Accused absent. u/s.317 crpc petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது திண்டுக்கலில் குடியிருக்கிறேன். நான் நீதிமன்றத்தில் உதவியாளராக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். எதிரியை தெரியுமா என்றால் அவர் பெயர் ஞாபகம் உள்ளது. 12 வருடம் ஆகிவிட்டதால் அவர் முகம் எனக்கு ஞாபகம் இல்லை. 20.04.2012ம் தேதி காலை 10.30 மணிக்கு நான் பழனி விரைவு நீதிமன்றத்தில் நீதிமன்றத்திற்குள் பணியில் இருந்தேன். நான் நீதிமன்றத்தில் ஒவ்வொரு கோப்புகளாக வாசித்து கொண்டிருந்தேன். காலை 10 3/4 மணியளவில் நீதிமன்றத்தின் வெளியே இரைச்சலாக இருந்தது யார் யார் சண்டை போட்டுக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**மேற்படி வழக்கில் சொல்லப்பட்டுள்ள நீதிமன்றம் பழனி R.S. ரோட்டில் இயங்கி கொண்டிருந்தது. மேற்படி நீதிமன்றம் தேவஸ்தான விடுதியில் உள்ள அந்த வளாகத்தில் இடதுபுறமாக அமைந்திருந்த கட்டிடத்தில் மாடியில் செயல்பட்டு இருந்தது. மாடிக்கு செல்லும் படிகள் இடதுபுறம் கடைசியில் அமைந்திருந்தது. மேற்படி விடுதியில் காம்பவுண்டில் இருந்து சுமார் 200 முதல் 300 அடி தள்ளி மேற்படி மாடி படி அமைந்திருந்தது என்றால் சரிதான். மாடிபடியில் யாராவது நின்று**

**கொண்டிருந்தாலோ, பேசிக்கொண்டிருந்தாலோ அல்லது சண்டையிட்டு கொண்டிருந்தாலோ மேற்படி R.S. ரோடு சாலையில் செல்பவர்களுக்கு தெரியாது. மேற்படி வழக்கில் சொல்லப்பட்டுள்ள புகார்தாரர் எதிரி ஆகியோர்களை சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நீதிமன்றம் செயல்படும் வளாகம் இருந்த இடத்தில் செயல்படும் விடுதியில் தேவஸ்தான விடுதி என்பதால் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் அதிகஅளவில் அங்கு தங்கியிருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு எப்போதும் பக்தர்கள் அதிகமாக இருப்பதால் சத்தமும், இரைச்சலும் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றி வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. இன்று வழக்கின் கோப்பை படித்துப்பார்த்து தான் மேற்படி வழக்கில் சொல்லப்பட்டுள்ள தேதியை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.03.26 10:46:33 +0530

**நீதித்துறை நடுவர்**
**பழனி**